CO

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019

Reg.No. 37 10A

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 1.15 மணி மதிப்பெண்கள்: 50

### பிரிவு - I

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 3 x 1 = 3

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. உலகக் காற்று நாளாகக் கொண்டாடப்படும் நாள் ________.
   அ) ஜுன் 5 ஆ) ஆகஸ்ட் 15 இ) ஜுலை 15 ஈ) ஜுன் 15
3. கீழ்வருவனவற்றுள் எது பொதுமொழி ________.
   அ) கண் ஆ) படம் பார்த்தான் இ) எட்டு ஈ) மதிமுகம்

**கோடிட்ட இடத்தை நிரப்புக:** 3 x 1 = 3

4. கரும்பின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொல் ________.
5. 'விருந்தே புதுமை' என்று கூறியவர் ________.
6. விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வருவது ________ தொழிற்பெயராகும்.

**பொருத்துக:** 2 x 1 = 2

7. கனிச்சாறு - அதிவீரராமபாண்டியன்
8. காசிக்காண்டம் - பெருஞ்சித்தரனார்
   - நப்பூதனார்

**விடைக்கேற்ற வினா அமைக்க:** 2 x 1 = 2

9. மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று திருமூலர் கூறியுள்ளார்.
10. விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

### பிரிவு - II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளி:** 5 x 2 = 10

11. பெருஞ்சித்திரனாரின் படைப்புகளுள் நான்கினை எழுதுக.
12. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
13. வசன கவிதை - குறிப்பு எழுதுக.
14. காற்றைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?
15. உயரளபெடையின் வகைகள் யாவை?
16. அன்மொழித் தொகை என்றால் என்ன?
17. பல கற்றும் கல்லாதார் யார்?

### பிரிவு - III

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளி:** 2 x 4 = 8

18. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை எழுதுக.

*(அல்லது)*

முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை எழுதுக.

19. இலக்கியங்களில் காற்று எவ்வாறெல்லாம் குறிப்பிடப்படுகிறது?

*(அல்லது)*

வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு.

- குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பிரிவு - IV

20. செய்யுள் வடிவில் விடை தருக: 2 + 4 = 6

அ) 'எப்பொருள் .........' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

ஆ) 'விருந்தினனாக ........' எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடலை எழுதுக.

21. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி: 5 x 1 = 5

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

1. 'தென்னன்' என்று குறிப்பிடப்படுபவர் யார்?
2. 'பாப்பத்தே' என்பது எதனைக் குறிக்கும்?
3. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள நூல்கள் யாவை?
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
5. 'எண் தொகை' - பிரித்து எழுதுக.

22. சந்தக் கவிதைகளில் வந்த பிழைகளைத் திருத்தி எழுதுக: 1 x 4 = 4

'தேனிலே ஊரிய செந்தமிழின் – சுவை
    தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
    ஓதி யுனர்ந்தின் புருவோமே'

– கவிமணி தேசிக விநாயகனார்

23. எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக: 2 x 1 = 2

1. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
2. ஐந்துசால்பு ஊன்றிய தூண்

24. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளி: 1 x 5 = 5

அ) குமரிக் கடல் முனையும் வேங்கட மலை முகடும் - தகைசால் தமிழன்னை - பிள்ளைத்தமிழ் பேசி அந்தாதி கூறி - செந்நாப் புலவர்கள்.

*- இக்குறிப்புகளைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.*

ஆ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

*****